# MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED ON 17.09.2025 FOR THE CAPACITY AUGMENTATION OF EXISTING OPERATIONAL MARINE LIQUID TERMINAL (MLT) FROM 3 MMTPA TO 6 MMTPA AT M/S. KAMARAJAR PORT LIMITED, PUZHUTHIVAKKAM VILLAGE, PONNERI TALUK, TIRUVALLUR DISTRICT, TAMILNADU.

| | |
|---|---|
| **Name of the Project:** | CAPACITY AUGMENTATION OF EXISTING OPERATIONAL MARINE LIQUID TERMINAL (MLT) FROM 3 MMTPA TO 6 MMTPA AT **M/s. KAMARAJAR PORT LIMITED, PUZHUTHIVAKKAM VILLAGE, PONNERI TALUK, TIRUVALLUR DISTRICT** as per the Section 2(i) and (ii) of the Environmental Impact Assessment Notification, 2006. |
| **Venue:** | Community Hall – Kattupalli Village, Ponneri Taluk,<br>Tiruvallur District - 600120. |
| **Date & Time:** | 17.09.2025 - 11.00 A.M. |
| **Presiding Officers:** 1. | Thiru. C.Suresh,<br>District Revenue Officer,<br>Tiruvallur District, Tamilnadu. |
| 2. | Er. G.Gajalakshmi, M.Tech., M.B.A.,<br>District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Gummidipoondi,<br>Tiruvallur District, Tamilnadu. |

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Gummidipoondi welcomed the District Revenue Officer, Officials, Public, NGO's and Project Proponent who have attended the Public Hearing and informed that M/s. Kamarajar Port Limited, located at Puzhuthivakkam Village, Ponneri Taluk, Tiruvallur District has proposed for Capacity Augmentation of Existing Operational Marine Liquid Terminal (MLT) from 3 MMTPA to 6 MMTPA which requires prior Environmental Clearance from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF & CC), Government of India (GOI), under Environmental Impact Assessment Notification, 2006.

Based on it, Environment Impact Assessment report was prepared by the unit as per the Terms of Reference (TOR) issued by the Environment Impact Assessment committee and published public notice as mandated regarding conducting of public hearing in the two newspapers namely "The New Indian Express (Tamilnadu)" & "Dinakaran (Chennai)" on 14.08.2025 and accordingly today 17/09/2025 public hearing has been arranged.

On behalf of the unit of M/s. Kamarajar Port Limited, the Environmental Consultant has made power point presentation about the proposed Capacity Augmentation of Existing Operational Marine Liquid Terminal (MLT) from 3 MMTPA to 6 MMTPA. Further highlighted the outcomes of the baseline studies and detailed the anticipated benefits and advantages of the proposed expansion project.

Following the presentation, the public were invited to express their views, concerns and questions if any by indicating their name and village name from where he/she belongs to.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| 1 | **Mr. Dinesh,**<br>**Kattupalli Village** | • He enquired about the benefits of the scheme to the Kattupalli people. He also revealed that nobody from Kattupalli were given appointment and allowed to enter inside the company M/s. Ennore Tank Terminal Private Limited located in Kamarajar Port Limited (KPL).<br>• The project proponent assured that employment opportunities may be provided for the youth of the Kattupalli village for the proposed capacity augmentation project based on their educational qualification. |
| 2 | **Mr. Raja,**<br>**Kattupalli Village** | • He asked to reveal the employment opportunities given to the Kattupalli people in the previous Marine Liquid Terminal project located in KPL and also informed that he was opposing the proposed project.<br>• The project proponent informed that employment opportunities to people from Kattupalli village was under consideration based on their educational qualification. |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| 3 | **Mrs.Vijaya,**<br>**Kattupalli Village** | • She revealed that 31 acres of land given by her for the KPL Project and the entire project lies in the land of Kattupalli people, but no employment was given to any of her family members.<br>• She also expressed her concern about the pollution prevailing in that area and most of the people were dying due to cancer.<br>• She also asked for employment opportunities for the Kattupalli people. She opposed the project.<br>• District Revenue Officer (DRO) replied that many people have obtained land acquisition certificate from their office and those who have approached the court for the higher compensation can approach the KPL for employment after judgment. He also stated that Kamarajar Port Limited has spent more CSR funds in Tiruvallur District. |
| 4 | **Mr. Ravi,**<br>**Ex-Chairman,**<br>**Minjur** | • He informed that ETTPL has to spend Rs. 5 Crores for CSR activity. However, they spend only Rs. 5 Lakhs for CSR activity.<br>• He expressed his distress that no employment opportunity given to Kattupalli village people.<br>• No service road for the local people for walking, often occurrence of accidents, traffic jams in the locality.<br>• He requested to provide service road for village people.<br>• Also informed that thousands of lorries were passing through this road but no lorry parking yard was available so far and also requested to provide lorry parking yard.<br>• District Revenue Officer (DRO) replied that CSR fund has to be routed through District Collector only. He also assured that CSR fund will be released after getting approval from District Collector. DRO instructed that the officers of KPL to provide employment to local people based on the project expansion size and also instructed the KPL management that in the place of retired people replacement of man power should be from the local community. |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| 5 | **Mr. Sourirajan, Athipattu** | • He congratulated the KPL team for fulfilling their CSR responsibility.<br>• He also stressed for preference in employment may be given to the local people through District Administration by KPL which will be a good example.<br>• He expressed his consent for the proposed project with the regularization of TNPCB. |
| 6 | **Mr. Gowrisankar, Kattupalli** | • He informed that 100 women were employed in KPL, out of which 32 women have retired due to age criteria. However, their PF claims have not yet been settled.<br>• He also highlighted that no transport facility was provided to these employees from their residential area to the workplace.<br>• He also informed that there is no proper road access for the residents of Kattupalli.<br>• He requested that a resolution be passed in the meeting to address these issues. Specifically, he urged that preference in employment for the expansion project be given to local residents, and that replacements for the retired employees should be recruited exclusively from Kattupalli.<br>• Furthermore, he pointed out that no new road has been provided for the public, as the old road now falls within the KPL campus and is no longer accessible to residents of Kattupalli.<br>• He also mentioned that concerns regarding pollution have been repeatedly raised in Grama Sabha meetings, but no action has been taken.<br>• Also informed that medical camps have not been conducted in Kattupalli and that the public was not properly informed about this public hearing meeting.<br>• KPL General Manager replied that the PF claims as per norms were settled for those who retired on superannuation. He also informed that 2 E-Vehicles were provided in Kamarajar Port campus for staff transport. He also assured that road facility will be provided to Kattupalli and road work in Athipattu was in progress.<br>• DRO instructed the KPL management to conduct |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | medical camp under intimation to public through whatsapp group as mentioned by Mr. Gowrisankar. |
| 7 | **Mr. Arunraj,**<br>**Kattupalli** | • He informed that they have informed about the pollution caused by JSW Company to the TNPCB but no action taken till date. Resolution passed in Gram Sabha were also submitted to TNPCB but no action taken till date.<br>• He also stressed to give written confirmation regarding employment opportunities to local people. He also welcomed the project.<br>• District Revenue Officer (DRO) informed that minutes were recorded and in the final Environmental Clearance, KPL should assure employment opportunities and road facility for Kattupalli village people. |
| 8 | **Mr. Sethuraman,**<br>**Kattupalli** | • He informed that KPL administration has denied transportation facilities to Kattupalli people, and permanent employment not provided for any men in the past ten years, only 100 women were given employment.<br>• He also informed that Ennore Tank Terminal Private Limited (ETTPL) located in KPL has not paid property tax to the District Administration.<br>• He requested for employment to 10 youth per village totaling 50 youths to be employed in 5 villages in the arising vacancy. |
| 9 | **Thiru.Kathirvel,**<br>**Ex-Vice President,**<br>**Athipattu** | • He requested TNPCB to control pollution by installing pollution control room in Kattupalli or Athipattu to monitor the pollution caused by gas, coal, ash, petrol and oil from industries.<br>• He informed that houses in his area are covered by ashes.<br>• Also informed that initially 100 women from Kattupalli and 60 women from Athipattu village were given employment on rotation basis. But at present only 68 and 19 were working from Kattupalli & Athipattu.<br>• Informed that BPCL has not obtained CMDA approval and not paid any Property Tax to the District |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | Administration.<br>• He also informed that BPCL has conducted Public Hearing Meeting at Manali Pudhunagar and assured employment opportunity for 150 people, but not provided any employment to local people. |
| 10 | **Tmt.Dhanalakshmi, Ex-Councillor, Kattupalli** | • She complained that no facility provided to Kattupalli using CSR fund by KPL.<br>• She informed that 6 employees worked in the Port had died belongs to Kattupalli, no compensation was given to their family and also not provided employment for the family of affected persons.<br>• She also informed that women were given contract employment on rotation basis for basic work (gardening, cleaning, toilet cleaning) through "Magalir Nala Munnetra Sangam".<br>• KPL has not provided any employment for educated men/women in Kattupalli.<br>• She also opposed this expansion project as it has not provided employment to Kattupalli people, but more North Indian people were given employment in KPL, ETTPL etc.<br>• Request given in the Public Hearing Meeting conducted for existing Marine Liquid Terminal located at KPL for 3MMTPA were not adhered.<br>• District Revenue Officer (DRO) instructed the KPL management to record the grievances raised by her. |
| 11 | **Thiru. Raji, Kattupalli** | • He stressed the point that 100 women were given employment and 32 retired on superannuation and new people were not appointed and work burden shared among existing 68 women employees itself.<br>• He requested to fill the 32 vacant positions with the people of Kattupalli.<br>• He also requested to provide Personal Protection Equipments, transport facilities and toilet facilities to the employees working in KPL.<br>• He also informed that KPL has not provided |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | employment to Kattupalli village people.<br>• He also requested to provide employment for 25 persons from Kattapalli for the expansion project as committed by management of ETTPL. |
| 12 | **Thiru.Udayakumar, Kattupalli** | • He stressed that the District administration has not noticed the violation of approvals etc.<br>• Industries are acting as superior to District Administration.<br>• District administration has to inspect the violations done by the industries and then approval may be given.<br>• Informed that many people were affected by Asthma / Wheezing due to pollution.<br>• He requested to provide proper road facilities.<br>• He enquired about the methods for recovery of oil spillage in sea and also informed that he opposed this project.<br>• KPL management informed that they are taking precautionary actions for non-spillage, if happens unfortunately, he assured that they have pumps inspected by National Coast Guard to remove the spillages. |
| 13 | **Thiru.Kadali, Kattupalli** | • He informed that in the Public Hearing meeting conducted in 2005 during commencement of KPL, requests made in that Public Hearing meeting were not fulfilled.<br>• He also explained that people were affected by air pollution and suffering Asthma etc.<br>• If any unfavourable incident occurs the people of Kattupalli village would be affected. He cited reference as Bhopal Gas Tragedy.<br>• He informed that CSR funds should be utilized upto 7 km radius but KPL has given the CSR funds beyond the radius for construction of building for college in Ponneri.<br>• He also informed that IOCL has conducted Public Hearing meeting for expansion project at Athipattu |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | Village. No public announcement done for that Public Hearing meeting.<br>• 100 women were employed for basic work and no direct / indirect employment given for people of Kattupalli in any expansion projects in KPL. |

The public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Officials, Public and NGO's and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the Ministry of Environment, Forest and Climate Change (MoEF & CC), Government of India (GOI).

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public Hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Gummidipoondi**

**District Revenue Officer,**
**Tiruvallur District**

**<u>திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் கிராமம், தி/ள்.காமராஜர் போர்ட் லிமிடெட்., நிறுவனத்தின் தற்போதுள்ள செயல்பாட்டு கடல் திரவ முனையத்தின் (Marine Liquid Terminal) கொள்ளளவை ஆண்டொன்றுக்கு 3 MMTPA அளவிலிருந்து 6 MMTPA ஆக விரிவாக்கம் செய்வதற்கான பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 17.09.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்.</u>**

| | |
|---|---|
| திட்டம்: | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் கிராமம், தி/ள்.காமராஜர் போர்ட் லிமிடெட் நிறுவனத்தின் தற்போதுள்ள செயல்பாட்டு கடல் திரவ முனையத்தின் (Marine Liquid Terminal) கொள்ளளவை ஆண்டொன்றுக்கு 3 MMTPA அளவிலிருந்து 6 MMTPA ஆக விரிவாக்கம் செய்வதற்கான திட்டத்தை முன்மொழிந்துள்ளது. |
| இடம்: | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள சமூதாய கூடம் |
| தேதி மற்றும் நேரம் : | 17.09.2025– காலை 11:00 மணி |
| தலைமை அதிகாரிகள்: | 1. திரு .C . சுரேஷ்,<br>மாவட்ட வருவாய் அலுவலர் ,<br>திருவள்ளூர் மாவட்டம்<br><br>2. திருமதி .G.கஜலட்சுமி, எம்டெக், எம்பிஏ.,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ,<br>தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,<br>கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் |

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். காமராஜர் போர்ட் லிமிடெட் நிறுவனத்தில் தற்போதுள்ள செயல்பாட்டு கடல் திரவ முனையத்தின் (Marine Liquid Terminal) கொள்ளளவை ஆண்டொன்றுக்கு 3 MMTPA அளவிலிருந்து 6 MMTPA ஆக விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு 2006 விதிகளின்படி இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றதுறை அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டியதாகும் என தெரிவித்தார்.

இதனடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுவினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளின் (TOR)–ன் படி அந்த நிறுவனத்தால் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. மேலும் பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட இருப்பதற்கான அறிவிப்பை சட்டப்படி தேவையானவாறு இரண்டு நாளிதழ்களில் "டெக்கான் கிரானிக்கல் (தமிழ்நாடு பதிப்பு) மற்றும் தினத்தந்தி (சென்னை பதிப்பு)" ஆகியவற்றில் 14.08.2025 அன்று வெளியிட்டது. அதன்படி இன்று 17.09.2025 பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

தி/எ். காமராஜர் போர்ட் லிமிடெட் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், திட்டத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் குறித்து பவர் பாயின்ட் விளக்கக் காட்சி மூலம் விளக்கவுரை வழங்கினார். இவ்விரிவாக்க திட்டம் காமராஜர் போர்ட் லிமிடெட்டின் தற்போதுள்ள செயல்பாட்டு கடல் திரவ முனையத்தின் (Marine Liquid Terminal) கொள்ளளவை ஆண்டொன்றுக்கு 3 MMTPA அளவிலிருந்து 6 MMTPA அளவிற்கு உயர்த்துவது என்பதைத் குறிப்பிடுவதாகவும், அடிப்படை ஆய்வுகளின் முடிவுகள் மற்றும் விரிவாக்கத் திட்டத்தால் கிடைக்கும் தன்மைகள் மற்றும் சாதகங்களும் தெரிவித்தார்.

கருத்து கூற விரும்பும் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்த பின் தங்களது கருத்துக்களைப் பதிவிடுமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கும்மிடிப்பூண்டி அவர்கள் தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்வைத்த கருத்துகள், கேள்விகள் மற்றும் திட்ட முன்மொழிவாளரின் விளக்கங்கள் கீழே விரிவாக வழங்கப்பட்டுள்ளன.

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| 1. | திரு. தினேஷ்,<br>காட்டுப்பள்ளி | • இத்திட்டத்தால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி கேட்கப்பட்டது .<br>• காட்டுப்பள்ளி வாழ்மக்களுக்கு எந்த வேலைவாய்ப்பும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.<br>• இதற்கு ETTPL நிறுவனத்தினர் தகுதியுள்ள இளைஞர்களுக்கு கல்வியின் அடிப்படையில் 40 விழுக்காடு 5 கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராம மக்களுக்கு |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தனர். |
| 2. | திரு. ராஜா,<br>காட்டுப்பள்ளி | • காட்டுப்பள்ளி வாழ்மக்களுக்கு காமராஜர் துறைமுகத்தில் வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பு பற்றி வினவினார், மற்றும் இத்திட்டத்தை எதிர்ப்பதாக தெரிவித்தார்.<br>• இதற்கு ETTPL நிறுவனத்தினர் காட்டுப்பள்ளி வாழ்மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது பற்றி பரிசீலனையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. |
| 3. | திருமதி. விஜயா,<br>காட்டுப்பள்ளி | • அவர் கூறுகையில் தாம் 31 ஏக்கர் நிலம் காமராஜர் துறைமுகத்திற்கு வழங்கியதாகவும், நிலத்திற்கான பணப்பலன் இதுவரை பெறப்படவில்லை என்றும் இத்திட்டத்தால் தம் குடும்பத்தில் எவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.<br>• காற்று மாசால் காட்டுப்பள்ளி மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறப்பதாகவும் தெரிவித்தார்.<br>• இவ்விரிவாக்கத் திட்டத்தில் காட்டுப்பள்ளி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.<br>• மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நிலம் வழங்கியவர்களுக்கு தங்கள் அலுவலகத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படுவதாகவும், வழங்கப்பட்ட நிலத்திற்கு அதிக தொகை கோருபவர்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின் பிறகு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து காமராஜர் துறைமுக நிறுவனம் இதுவரை திருவள்ளூர் மாவட்டத்திற்கு அதிகமாக செலவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| 4. | திரு. ரவி, முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர், மீஞ்சூர் | • ETTPL நிறுவனம் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் வழங்குவதற்கு பதிலாக 5 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.<br>• காட்டுப்பள்ளி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதையும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், விபத்துகளை தடுக்கவும், மக்கள் நடப்பதற்கு சர்வீஸ் சாலையும், லாரிகளை நிறுத்துமிடமும் காமராஜர் துறைமுகத்தினர் அமைத்துத் தர வேண்டும் என்றும் கோரிக்கைவைக்கப்பட்டது.<br>• மாவட்ட வருவாய் அலுவலர் பதிலளிக்கையில் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி மாவட்ட ஆட்சியர் மூலமாகவே வழங்கப்படுவதாக தெரிவித்தார். விரிவாக்கத்தின் தன்மைக் கேற்ப ஏற்படும் வேலைவாய்ப்பை காட்டுப்பள்ளி மக்களுக்கு வழங்குமாறும், பணி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஈடாக காட்டுப்பள்ளி மக்களுக்கே பணிவாய்ப்பு வழங்குமாறு காமராஜர் துறைமுக நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. |
| 5. | திரு. சௌரிராஜன், அத்திப்பட்டு | • பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியை வழங்கியதற்காக காமராஜர் துறைமுக நிர்வாகத்தைப் பாராட்டியதுடன் காட்டுப்பள்ளி மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குமாறு கோரினார்.<br>• இவ்விரிவாக்க திட்டத்தை தாம் ஆதரிப்பதாகவும் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குமாறும் கோரினார். |
| 6. | திரு. கௌரிசங்கர், காட்டுப்பள்ளி | • காமராஜர் துறைமுகத்தில் 100 பெண்கள் அடிப்படை வேலைக்காக அமர்த்தப்பட்டு, வயது மூப்பின் காரணமாக 32 பெண்கள் ஓய்வு பெற்றும் அவர்களின் வருங்கால வைப்பு நிதி |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | பெற்றுத்தரப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.<br>• காமராஜர் துறைமுகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வாகன வசதியும், காட்டுப்பள்ளியில் வாழும் மக்களுக்கு சாலை வசதியும் செய்துதரும்படி கோட்டுக்கொண்டார்.<br>• தாங்கள் கிராம சபை கூட்டத்தில் காற்றுமாசுகுறித்து பலமுறை பேசியும் எவ்விதபயனும் இல்லை எனக் குறிப்பிட்டார்.<br>• மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதில்லை என்றும், மக்கள்கருத்து கேட்பு கூட்டத்திற்கு சரியான/ போதுமான அறிவிப்பு பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.<br>• இதற்கு காமராஜர் துறைமுக நிர்வாகத்தினர் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வருங்காலவைப்பு நிதி பெற்று வழங்கப்பட்டுள்ளதாகவும், பணியாளர்களின் வசதிக்காக 2 மின்சார வாகன வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும், சாலை வசதியும் செய்துதருவதாகவும் ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>• மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் மக்களுக்குதகுந்த அறிவிப்பு வாட்ஸ் அப் குழு மூலம் வழங்கிவிட்டு மருத்துவமுகாம்கள் நடத்துமாறு காமராஜர் துறைமுக நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினார். |
| 7. | திரு. அருண்ராஜ்,<br>காட்டுப்பள்ளி | • காட்டுப்பள்ளியில் உள்ள நிறுவனங்களால் ஏற்படும் மாசுபாட்டிற்கு இதுவரை மாசுகட்டுப்பாடு வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.<br>• காட்டுப்பள்ளி வாழ்மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார். |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | • மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் திரு. அருண்ராஜ் அவர்களின் குறிப்புகள் கூட்ட குறிப்பில் தெரிவிக்கப்படும் என்றும் இறுதி அறிக்கையில் சாலை வசதி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து உறுதி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். |
| 8. | திரு. சேதுராமன், காட்டுப்பள்ளி | • காமராஜர் துறைமுக நிர்வாகம் காட்டுப்பள்ளி மக்களுக்கு போக்குவரத்து வசதியும், வேலைவாய்ப்பையும் மறுத்துள்ளதாகக் குறிப்பிட்டார். \ <br>• 100 பெண்களைத் தவிர எந்த ஒரு ஆடவருக்கும் காமராஜர் துறைமுகத்தில் பணி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். <br>• ETTPL நிறுவனத்தினர் தற்பொழுதுவரை சொத்து வரியை மாவட்ட நிர்வாகத்திற்கு செலுத்தவில்லை என்பதையும் தெரிவித்தார். <br>• ஒரு கிராமத்திற்கு 10 நபர்கள் வீதம், 5 கிராமங்களிலிருந்து 50 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. |
| 9. | திரு. கதிர்வேல் – முன்னாள் ஊராட்சி மன்ற துணைதலைவர், அத்திப்பட்டு. | • தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அத்திபட்டிலோ அல்லது காட்டுப்பள்ளியிலோ, மாசு கட்டுப்பாடு அறை அமைத்து நிலக்கரி, வாயு, சாம்பல், பெட்ரோல் மற்றும் எண்ணெய்களால் ஏற்படும் காற்று மாசின் அளவை கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். <br>• காட்டுப்பள்ளி சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள வீடுகளின் மேற்கூரையில் சாம்பல் படலமாக படிந்திருப்பதையும் சுட்டிக் காட்டினார். <br>• காட்டுப்பள்ளியிலிருந்து 100 பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாகவும் அவர்களில் 68 பெண்கள் மட்டுமே |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | வேலைக்கு செல்வதாகவும், அத்திப்பட்டில் 60 பெண்களுக்கு சுழற்சி முறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாகவும் அவர்களில் தற்போது வெறும் 19 பெண்கள் மட்டுமே வேலைக்கு செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.<br>• BPCL நிறுவனம் சொத்துவரியை மாவட்ட நிர்வாகத்திற்கு செலுத்தவில்லை என்பதையும் தெரிவித்தார். |
| 10. | திருமதி. தனலட்சுமி, முன்னாள் ஊராட்சிமன்ற உறுப்பினர். | • காமராஜர் துறைமுக நிர்வாகம் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து இது நாள்வரை காட்டுப்பள்ளிக்கு எந்த வசதியையும் செய்துதரவில்லை என்றும் அடிப்படைபணிகளை மட்டுமே காட்டுப்பள்ளி வாழ் பெண்கள் 100 பேருக்கு வழங்கியதாகவும், படித்த இளைஞர்கள் யாருக்கும் காமராஜர் துறைமுகத்தில் பணி வழங்கவில்லை என்றும் அதிருப்தி தெரிவித்தார்.<br>• காமராஜர் துறைமுக நிர்வாகத்தினர் காட்டுப்பள்ளியிலிருந்து வேலைக்கு சென்று வந்த 6 பெண்கள் இறந்த பிறகு அவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும், அவர்களின் குடும்பத்திலிருந்து எவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்<br>• காமராஜர் துறைமுக நிர்வாகம் 3MMTPA திட்டத்தை கொண்டுவரும் போது தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் எதையும் செய்துதரவில்லை என்றும் குறிப்பிட்டார்.<br>• இதனை மாவட்ட வருவாய் அலுவலர் கூட்டக்குறிப்பில் குறித்துக்கொள்ளும்படி தெரிவித்தார். |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| 11. | திரு.ராஜி,<br>காட்டுப்பள்ளி | • 100 பெண்களை பணியமர்த்திய காமராஜர் துறைமுக நிர்வாகம் அவர்களில் 32 பேர் வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்ற பின், அவர்களுக்கு மாற்றாக யாரையும் புதியதாக பணியில் அமர்த்தாமல் மொத்த பணியையும் மீதம் இருப்பவர்களை செய்ய வைத்து அவர்களுக்கு மிகுந்த பணிச் சுமையை கொடுத்துக் கொண்டிருப்பதாகவும், 32 காலிபணியிடங்களை காட்டுப்பள்ளி மக்களைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்றும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதி, பாதுகாப்பு உபகரணங்கள், கழிவறை வசதியும் செய்துதர வேண்டும் என்றும் கோரினார்.<br>• இத்திட்ட விரிவாக்க பணியில் 25 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று ETTPL நிர்வாகத்தினர் தெரிவித்ததை நடைமுறை படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். |
| 12. | திரு. உதயகுமார்,<br>காட்டுப்பள்ளி | • காமராஜர் துறைமுக நிர்வாகத்தின் அத்து மீறல்களை மாவட்ட நிர்வாகம் கண்டுகொள்வதில்லை என்றும் ஒப்புதல் தருவதோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாக எண்ணுவதாகவும், அத்து மீறல்களை கண்காணிப்பதில்லை என்றும் தெரிவித்தார்.<br>• காமராஜர் துறைமுகத்தின் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்கள், காற்று மாசுபாட்டதால் ஆஸ்த்துமா மற்றும் ,மூச்சுத்திணறல் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சரியான சாலை வசதி செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.<br>• கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டால் |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | காமராஜர் துறைமுக நிர்வாகம் எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை, மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் வினவினார்.<br>• இதற்கு காமராஜர் துறைமுக நிர்வாகம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், துரதிருஷ்டவசமாக எண்ணெய் கசிவு ஏற்பட்டால் கசிவை உறிஞ்சி எடுக்கும் தேசியகடலோர காவல் படையினரால் பரிசோதனை செய்யப்பட்ட பம்புகள் இருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. |
| 13. | திரு.கடலி, காட்டுப்பள்ளி | • 2005 ல் காமராஜர் துறைமுக நிர்வாகம் வைத்த பொதுமக்கள் கருத்து கேட்புகூட்டத்தில், வைக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும், காற்று மாசுபாட்டால் காட்டுப்பள்ளி மக்கள் ஆஸ்த்துமாவால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.<br>• சிறிய தவறால் பல பேர் உயிரிழந்த போபால் விஷவாயு கசிவு விபத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்.<br>• CSR நிதி 7 கி.மீ சுற்றளவுக்குள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் ஆனால் காமராஜர் துறைமுக நிர்வாகம் அவ்வாறு செய்யவில்லை என்றும், ஆனால் காமராஜர் துறைமுக நிர்வாகம் அதற்கு அப்பால் பொன்னேரியில் அரசு கலை கல்லூரிக்கு CSR நிதியிலிருந்து கட்டிடம் கட்டி கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.<br>• அடிப்படை பணிகளுக்காக மட்டுமே 100 பெண்கள் பணியமர்த்தப்பட்டதாகவும், பின்னர் நடைபெற்ற விரிவாக்கத் திட்டத்தில் |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | யாருக்கும் பணி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்து இத்திட்டத்தை எதிர்ப்பதாக தெரிவித்தார். |

பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம், திருவள்ளூர் மாவட்டவருவாய் அலுவலர், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் NGOs ஆகியோருக்கு நன்றி தெரிவித்து நிறைவுற்றது. மேலும், கூட்டத்தின் நடவடிக்கைகள் (ஒலி மற்றும் காணொளி பதிவுகள்) மற்றும் கூட்டத்தின் மினிட்ஸ் நகல் ஆகியவை இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றதுறை அமைச்சகத்துக்கு (MoEF&CC,GOI) அனுப்பப்படும் என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்களின் பட்டியல், கூட்டத்தின் ஒலி மற்றும் காணொளி பதிவுகள், மேடையில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மற்றும் கூட்டத்தின் புகைப்படங்கள் ஆகியவை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
கும்மிடிப்பூண்டி.

மாவட்ட வருவாய் அலுவலர் ,
திருவள்ளூர் மாவட்டம்.